**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | |
|---|---|
| Case Number | CC No. 57/2026 |
| Deposition of witness | PW- 1 /LW- 1 |
| Name | திரு. விக்னேஷ் |
| Father's/Husband Name | திரு. சிவக்குமார் |
| Village | விக்ரமம், மதுக்கூர் |
| Taluk | பட்டுக்கோட்டை |
| Age | 31/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 25th day of May 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**
**(சாட்சியை நீதிமன்ற காவலர் திரு. வீரப்பிரகாஷ் GR -I 1990 என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூரில் தங்கியிருந்து IT கம்பெனியில் வேலை பார்த்து வருகிறேன். என் அம்மாவிற்கு உடம்பு சரியில்லாததால் TMCH ல் சிகிச்சைக்காக சேர்த்திருந்தோம். கடந்த 07.12.2025 நான் என் அம்மாவை பார்க்க மருத்துவமனைக்கு சென்றேன். அப்போது வீட்டை பூட்டி சாவியை வெளியில் உள்ள சோபா அடியில் வைத்து சென்றேன். நான் அன்றே வந்துவிடலாம் என்று நினைத்தேன் முடியாததால் மறுநாள் 8ம் தேதி காலை 09.00 மணிக்கு வீட்டை வந்து பார்த்த போது வீட்டின் Side door திறந்த நிலையில் இருந்தது. வீட்டிற்குள் சென்று பார்த்தபோது வீட்டிற்குள் அனைத்து கதவுகளும் திறந்து கிடந்தது. வீட்டினுள் எல்லா பொருட்களும் கலைந்தும், என் Dell Laptop காணாமல் போயிருந்தது. என் அம்மாவின் தாலிகயிற்றில் இருந்த குண்டு, காசு ஆகியவை காணாமல் போயிருந்தது. என் அப்பாவிற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். என் அப்பா போலிஸிற்கு போன் செய்தார், அப்போது போலிஸ் வந்து விசாரணை செய்தார்கள். அன்றே சுமார் 01.00 மணியளவில் தடயவியல் ஆய்வாளர்களும் வந்து விசாரணை செய்தார்கள். மறுநாள் 08.12.2025 கா.நி சென்று புகார் கொடுத்தேன். அந்த புகார்

மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது. அது **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு போலிஸார் எதிரிகளை கைது செய்து திருடுபோன என் Laptop ஐ கண்டுபிடித்துவிட்டதாகவும், சொன்னார்கள். அதன்பேரில் கிறிஸ்துமஸ் அன்று நான் கா.நி சென்றேன். அங்கு ஆஜர் எதிரிகள் இருவரும் கா.நி ல் இருந்தார்கள். இவர்கள்தான் என் Laptop ஐ திருடியதாக போலிஸார் சொன்னதன் பேரில் தெரிந்துகொண்டேன். என்னிடம் காட்டப்படும் Laptop தான் என்னுடைய திருடு போன Laptop ஆகும். அது **அ.சா.பொ.1 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிஸார் சொன்னதன் பேரில் தான் எதிரிகள் என் Laptop ஐ திருடினார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிரிகள் என் வீட்டில் திருடியதை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஓம்/- திரு.த.சுதர்சன் M.A.,L.L.B.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை